# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (தை–மாசி) பிப்ரவரி 2011 ஏர்-26, உழவு-2, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : பரணி கே.பாலசுப்பிரமணி |
| துணைத்தலைவர்கள் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : ஆர். செல்வராஜ் |
| இணைச்செயலாளர்கள் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>Dr.கே.ஆர்.பி.சண்முகம் |
| பொருளாளர் | : கே.கே. ரமேஷ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ஏ.கணபதி | எஸ்.சிவசாமி |
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | எம்.அமராபதி |
| ஆர். சண்முகவேல் | எஸ்.அன்பழகன் |
| எம். கார்த்திக் | சி.சர்வராஜன் |
| வி.பி.வீரப்பன் | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| ஆர்.இளங்கோ | கே.என்.தர்மராஜ் |
| பி.ரவி | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | உத்தமிபொன்னுசாமி |

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| கட்டிட நிதி | - | 3 |
| மாற்றமே முன்னேற்றம் | - | 4 |
| வாழ்த்துகிறோம் | - | 5 |
| சுருங்கி வரும் விவசாயம் | - | 6 |
| தமிழ்நாடு | - | 8 |
| தமிழகத்தின் உச்சங்கள் | - | 9 |
| இந்தியா | - | 10 |
| உலகம் | - | 12 |
| அறிவியல் தொழில்நுட்பம் | - | 14 |
| நோபல் பரிசு 2010 | - | 15 |
| நோபல் செய்திகள் | - | 17 |
| விளையாட்டுச்செய்திகள் | - | 18 |
| உழைப்பே முதலீடு | - | 20 |
| புகைப்படக் கலையின் கதை | - | 21 |
| மணமகள் தேவை | - | 22 |
| வாழ்த்துகிறோம் | - | 23 |
| அழகூட்டும் உணவு | - | 24 |
| மணமகள் தேவை | - | 26 |
| மணமகன் தேவை | - | 29 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்!



சென்னை சங்கச் செயல்பாடுகளை நேரிலும், கடிதம் மூலமும், தொலைபேசியிலும் பாராட்டிய நண்பர்களுக்கு நன்றி. செய்தி மடல் இன்னும் சிறந்த முறையில் பயனுள்ள கொங்கு சமுதாய, கொங்கு நண்பர்களைப்பற்றிய முக்கியச் செய்திகளைத் தாங்கி வெளிவர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கொங்குச் சமுதாய வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்து மறைந்த பெருந்தகையாளர்களுக்கும், தற்போது சமுதாய வளர்ச்சிக்காக பலவகையிலும் பாடுபட்டு வருகின்ற, ஊக்கமளித்து வருகின்ற, உதவி வருகின்ற கொங்குப் பேரினச் சொந்தங்களுக்கும் நாம் பெரும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

உழவுத் தொழில் புரிந்து பார் போற்ற வாழ்ந்த நம் கொங்குச் சமுதாய மக்கள், இன்று உழவுத் தொழில் நசிந்து விட்டதால் கிராமங்களில் உள்ள நம்மின மக்கள் சொல்லொனா வேதனையும், துயரமும் அடைவதோடு, கடன்பட்டு வாழ்க்கைப் படகைச் செலுத்த மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் பார்த்து வருகிறோம். நம்மில் சுமார் 20% பேர் தொழிலிலும், அரசு வேலையிலும், வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் நிறுவன வேலையிலும் ஈடுபட்டு நல்ல நிலையில் உள்ளனர். ஆனால் மீதி 80% பேரின் நிலை கண்களைக் குளமாக்குவதாகவே உள்ளது.

முன்னேறியவர் பட்டியலில் இருந்த நமது கொங்கு வேளாளர் சமுதாயம் 16–05–1975 அன்று பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பட்ட பிறகு தான், இந்த 35 ஆண்டுகளில் நமது சமுதாய இளைஞர்கள் நல்ல கல்வியும், அரசு வேலையும் பெற முடிந்தது. இதனால் பலனடைந்தவர்கள் சுமார் 10 சதவித மக்களே. ஒன்றரை கோடி கொங்கு சமுதாய மக்களில், பெரும்பான்மையோர் இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்றனர் என்பது மிகவும் வேதனையும், வருத்தமும் பட வேண்டிய செய்தியாகும். இந்த நிலை மாறிட, நம் சமுதாயத்தில் நல்ல நிலையில் உள்ளவர்கள் மற்றவர்களுக்கு உதவுவது அவசியமாகும். மற்றவர்களை கைதூக்கி விடுவது மிகவும் அவசியமாகும்.

உலகை வெல்லும் கருவி கல்வி யாகும் என்பர் சான்றோர். நம்மின மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கு நிதியுதவி செய்வது நம்முடைய தலையாய கடமையாகும். சந்தோஷத்தில் பெரிய சந்தோஷம், பிறருக்கு உதவி அவர்களுடைய சந்தோஷத்தைக் காண்பது தான் என்று சான்றோர்கள் கூறியுள்ளனர். ‘ஈதல் இசைபட வாழ்தல்’ வாழ்க்கைத் தத்துவம் என்கிறார் வாழ்க்கை நெறி கற்பித்த பகுத்தறிவும் பகலவன் வள்ளுவர். முதலில் நம் குடும்பத்திற்கு, அடுத்து நம் சொந்தத்திற்கு, பின்னர் சமுதாயத்திற்கு, பின்னர் நாட்டிற்கு உதவியும் சேவையும் செய்வது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

எனவே சமுதாய உணர்வு கொண்டு, நம்மில் தாழ்ந்திருப்போரை உயர்த்திட, ஒவ்வொரு கொங்கு சொந்தமும் உதவிட வேண்டும். நம சங்கம் சமுதாயத்திற்காக உழைக்கக் காத்திருக்கிறது. உங்கள் உதவியும், ஒத்துழைப்பும் இருந்தால் எதையும் சாதிக்க முடியும். ‘கொங்கு செழித்தால் எங்கும் செழிக்கும்’ என்பதற்கேற்ப, கொங்கு சமுதாய மக்களைச் செழிக்க வைப்போம். சங்கத்திற்கு கை கொடுங்கள். நிதியுதவி செய்யுங்கள்.

நன்றி

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 61,85,683 |
| 1187 | | K.தேவராஜன் | 10,000 |
| 1188 | | S.பழனிசாமி | 1,500 |
| 1189 | 3444 | R.K.வெற்றி | 1,000 |
| 1190 | 3445 | M.தெய்வசிகாமணி | 1,000 |
| 1191 | 3446 | S.தனபாலன் | 1,000 |
| 1192 | 3448 | K.S.சாமிநாதன் | 1,000 |
| 1193 | 3449 | K. சுப்ரமணியன் | 1,000 |
| 1194 | 3450 | D.சசிகலா | 1,000 |
| 1195 | 3451 | C. அரவிந்தன் | 1,000 |
| 1196 | 3452 | P. பரமேஷ்வரன் | 1,000 |
| 1197 | | P. உமா மகேஸ்வரி LH | 1,000 |
| 1198 | | P. பீரதீப் குமார் GH | 1,000 |
| 1199 | 3447 | K.K.C. பாலு | 1,000 |
| 1200 | | A. சுதா LH | 1,000 |
| 1201 | | T. சிந்துமதி LH | 1,000 |
| 1202 | | K. சரண்யா LH | 1,000 |
| 1203 | | K. சங்கீதா LH | 1,000 |
| 1204 | | E. சுபா ஶ்ரீ LH | 1,000 |
| 1205 | | G. புவனேஸ்வரி LH | 1,000 |
| 1206 | | M. பிரதீபா LH | 1,000 |
| 1207 | | G. சுவர்ணாம்பிகை LH | 1,000 |
| 1208 | | S. சத்தியா LH | 1,000 |
| 1209 | | N. நடராஜன் | 1,000 |
| 1210 | | S. துர்கா தேவி LH | 1,000 |
| 1211 | | M. கோமளா LH | 1,000 |
| 1212 | | J. கவி ப்பிரியா LH | 1,000 |
| 1213 | | N. சக்தி ப்ரஹதீஷ் GH | 1,000 |
| 1214 | 0228 | Dr.M. ராமசாமி | 1,000 |
| 1215 | 3454 | S. ராஜா கதிரவன் | 1,000 |
| 1216 | 3456 | A. அண்ணாதுரை | 1,000 |
| 1217 | 3453 | M. சிவ சுப்ர மணியன் | 1,000 |
| 1218 | 3455 | S.மயில்வாகனம் | 1,000 |
| 1219 | | B. விஷ்ணுதாரணி | 1,000 |
| | | மொத்தம் | 62,28,183 |

# மாற்றமே... முன்னேற்றம்

நாளும் மாறும் தொழில் நுட்பத்திற்கேற்ப நாமும் மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எனவே உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளும் முறையிலும் மாற்றங்களைச் செய்ய சங்கத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்திலும் நமது சமுதாயத்திலும் நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விபரங்களை குறுந்தகவல்கள் (SMS) மூலம் உறுப்பினர்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்த எண்ணியுள்ளோம்.

**நீங்கள் செய்ய வேண்டியது என்ன ? :**

உங்கள் அலைபேசியில் இருந்து கீழே குறிப்பிட்டவாறு ஒரே ஒரு SMS அனுப்பவும். (KNS) (உங்களுடைய 4 இலக்கு எண்) (உங்களுடைய அலைபேசி எண்)

(உதாரணம்) KNS - 1234 - 98400 98400

**அனுப்ப வேண்டிய எண்**

**98840 - 22266**

**பரிசு :**

SMS - அனுப்பும் கொங்கு நண்பர்களின் எண்களைச் சங்கத்தின் பதிவேட்டில் பதிவு செய்தபின் குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்படும்.




மூன்று நண்பர்களுக்கு அழகிய கைக் கடிகாரம் பரிசாக வழங்கப்படும்.

**குறிப்பு :** முடிவுகள் SMS மூலம் தெரிவிக்கப்படும். SMS-ல் கொடுக்கப்பட்ட எண்ணைத் தொடர்பு கொண்டு பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

# வாழ்த்துகிறோம்




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ப. முருகேச பூபதி, மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை பேராசிரியர்கள் முனைவர் அர. சாந்தி மற்றும் முனைவர் இரா. நடேசன் ஆகியோருக்கு புது தில்லியிலுள்ள இந்திய உரச்சங்கம் 2010ம் ஆண்டின் காய்கறிப் பயிர்களில் உர மேலாண்மை என்ற சிறந்த ஆராய்ச்சிக்கான பொன்விழா ஆண்டு விருதினை வழங்கியுள்ளது. சிறிய வெங்காயம், வெண்டை, முட்டைக்கோஸ், காரட், உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் மரவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்கு மண் வளம் மற்றும் மகசூல் இலக்கிற்கேற்ற ஒருங்கிணைந்த உரப்பரிந்துரைகளை வரையறுத்த ஆராய்ச்சி முடிவுகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதிற்கான சான்றிதழ் மற்றும் ரூ. 20,000/–க்கான காசோலையை 29.11.2010 அன்று புது தில்லியில் நடைபெற்ற இந்திய உரச்சங்கத்தின் வருடாந்திர கருத்தரங்கத்தில் மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு.க. அழகிரி அவர்கள் வழங்கினார்.

விருது பெற்ற வேளாண் அறிஞர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டி மகிழ்கிறது.

❖❖❖❖❖

# நூல் வெளியீட்டு விழா

முதியோர் மருத்துவர் கொங்கு மாமணி டாக்டர் வி.எஸ். நடராசன் அவர்கள் எழுதிய 'முதுமை என்னும் பூங்காற்று' என்னும் நூல் வெளியீட்டு விழா தமிழ்நாடு மூத்த குடிமக்கள் மன்றம் சார்பில் சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் நூலை வெளியிட, திரையுலக மார்க்கண்டேயன், கம்பன் காதலன் திரு. சிவகுமார் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார். விழாவில் சிங்கம்பட்டி ஜமீன் திரு. தீர்த்தபதி இராஜா, மூத்த குடிமக்கள் மன்றத் தலைவர் திரு. எம். சிங்கராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற டாக்டர் வி. எஸ். நடராசன் அவர்களுக்கு விழாவில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

விழாவில் நமது சங்கத் தலைவர் திரு. பாணி கே. பாலசுப்பிரமணி அவர்கள் கலந்து கொண்டு, டாக்டர் V.S. நடராசன் அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்தினார். விழாவில் உயர்நீதி மன்ற நீதிபதி வாசுகி, மூத்த வழக்கறிஞர் திரு.இரா. காந்தி, இந்திரா இண்டஸ்ட்ரிஸ் தலைவர் திரு.கே. பொன்னுசாமி, செயற்குழு உறுப்பினர்கள் முனைவர் மணிமேகலை புஷ்பராஜ், திரு. சண்முகவேல் முதலானோர் கலந்து கொண்டனர். மிக அவசியமான, அருமையான நூலை எழுதிய டாக்டர் V.S. நடராசன் ஏற்புரை நிகழ்த்தினார்.

❖❖❖❖❖

# சுருங்கி வரும் விவசாயம்

சென்ற இதழ் தொடர்ச்சி ...

கே.கே.சோமசுந்தரம் IFS (ஓய்வு)
(முன்னாள் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்)

மேற்கூறிய நிலைகளை எண்ணிப் பார்க்கும் போது நாட்டின் முதுகெலும்பான விவசாயம் கூனிக் குறுகி வருகிறது என்பது நிதர்சனம். தற்போதைக்கு அது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் மிக விரைவில் விவசாயத்தின் மோசமான நிலையும் உணவுப் பஞ்சமும் வெளிப்படும் என்பதில் சந்தேகமில்லை. தற்போது தமிழ்நாட்டில் அரிசி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதையும், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து அரிசி வாங்கப்படுகிறது என்றும் அறிகிறோம். முக்கியமான பருப்பு வகைகளும் கூட வடநாட்டிலிருந்து தான் வாங்கப்படுகின்றன. எண்ணை வித்துக்களின் பற்றாக்குறைவால் மத்திய அரசே எண்ணையை இறக்குமதி செய்து வருகிறது. விவசாய உற்பத்தி தேசிய அளவில் (G.D.P) குறைந்த அளவு 5% இருந்தால்தான் விவசாயம் திருப்தியாக உள்ளது என அர்த்தம் கொள்ள வேண்டும். ஆனால் தற்போது அது மிகவும் குறைவாகத்தான் உள்ளது. இதைத்தான் நமது பாரதப் பிரதமரும் சமீபத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். ரோட்டு ஓரங்களில் உள்ள ஏராளமான விளை நிலங்களை தொழில் அதிபர்கள் வாங்கிவிட்டனர். விவசாயி தன் நிலங்களை விற்க தயாராகத்தான் உள்ளான். அப்படி வாங்கப்பட்ட நிலங்கள் விவசாயத்திற்கு உட்படுத்தப்படுவதில்லை. வீடுகள், தொழிற்சாலைகளாக, பள்ளிகளாக, கல்லூரிகளாக மாறிவிடுகின்றன. எது எப்படி இருப்பினும் மேலே விவாதித்த நிலைமை நீடிப்பின் விவசாய உற்பத்தி வெகுவாகக் குறையும் என்பதிலும், விவசாயியின் நிலை பரிதாபத்திற்கு உள்ளாகும் என்பதிலும் எந்த ஐயமும் இல்லை. இவற்றிற்கெல்லாம் தீர்வு, ஒட்டுமொத்தமாக விவசாய உற்பத்தியைப் பெருக்க நீண்ட காலத் திட்டம் வகுத்து மேலே கூறிய ஒவ்வொரு பிரச்சனையையும் தனித்தனியாக ஆராய்ந்து செயல்படுவது அரசின் கடமையாகும்.

### தரிசாக விடாமல் மரம் பயிரிடலாம் (TREE CULTURE)

மேலேகூறிய பல காரணங்களால் தரிசாக பூமியை விடாமல் விவசாயிகள் மரங்களைப் பயிரிடலாம். இடைப்பட்ட கால (Medium Duration) மரப் பயிர்களான குமிழ், மலைவேம்பு,

முள்ளில்லா மூங்கில், பீமட்டி மரம் போன்றவை விவசாயிகளுக்குக் கை கொடுக்கும். குறுகியகால மரப் பயிர்களான சவுக்கு, யூகாலிப்டஸ் ஆகியவற்றையும் பயிரிடலாம். இந்த இரண்டு மரங்களையும் 3, 4 ஆண்டுகளுக்குள் வெட்டி விடலாம். சேசாயி, புகலூர் ஆகிய காகித ஆலைகளுக்கு கூழ் மரங்களாக இவை அதிகம் தேவைப்படுகின்றன. செடிகளும் கொடுத்து அவர்கள் விவசாயியுடன் ஒப்பந்தமும் செய்து கொள்கிறார்கள்.

**மரங்களின் சிறுகுறிப்பு**

## குமிழ் (GMELINA ARBOREA)

குமிழ் மரத்தின் உபயோகம் பற்பல. 7 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகளுக்குள் வெட்டலாம். ஏக்கருக்கு 400 கன்றுகள் தேவைப்படுகின்றன. 7 ஆண்டுகள் கழித்து வெட்டும்போது, கதவு, நிலவு, ஜன்னல், மேஜை நாற்காலிகளுக்கு பயன்படுகிறது. தற்போதைய விலைப்படி 7 ஆண்டு ஆன மரங்கள் சுமார் 1 டன்னும்,12 ஆண்டு மரங்கள் 2 டன்னும் (மதிப்பு ரூ. 6000/– மற்றும் ரூ. 15000/–) கொடுக்கின்றன. வரப்புகளிலும் நடலாம். தமிழ்நாட்டில் மரம் போதாதால் உகண்டா, தான்சானியா ஆகிய நாடுகளிலிருந்து இம்மரம் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

## மலைவேம்பு (MELIA DUBIA)

இதுவும் ஒரு இடைப்பட்ட கால மரப்பயிர் வளர்ச்சியைப் பொறுத்து, 6 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகளுக்குள் வெட்டலாம். 10'X10', 12'X12' இடைவெளி விடலாம். 6–7 ஆண்டுகளுக்குள் வெட்டிவிடலாம் (அல்லது) மாற்று வரிசையை வெட்டாமல் விட்டுவிட்டால் எஞ்சியுள்ள மரம் விரைவாக பெருக்கும். அதற்கு தக்க விலையும் கிடைக்கும். ஏக்கருக்கு 310 முதல் 400 வரை நடலாம். (12'X12' . 10'X10' முறையே) அசுர வளர்ச்சி கொண்ட இந்த மரத்தை நம் விவசாயிகள் சமீப காலமாக அதிகமாகப் பயிரிட்டு வருகிறார்கள். கர்நாடகாவில் விவசாயிகள் மிக அதிகமாக பயிரிடுகிறார்கள். நல்ல விலையுமுண்டு. 5மீ உயரம் 100செ.மீ சுற்று இருந்தால் பிளைவுட்டிற்கு ஒரு மரம் ரூ.4000/–க்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. மரத்தின் உயரம், பருமனைப் பொறுத்து விலை பேசப்படுகிறது. சொட்டுநீர் போட்டு வாரம் இரண்டு தண்ணீர் விட்டால் முதலாண்டு 15 முதல் 20அடி உயரமும், இரண்டாமாண்டு சுமார் 30–35 அடி உயரமும் வளரும். விவசாயிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

❖❖❖❖❖

# தமிழ்நாடு

| | | | | |
|---|---|---|---|---|
| தலைநகரம் | : சென்னை | முதல் கவர்னர் | | |
| மொத்தப் பரப்பு | : 1,30,058 ச.கி.மீ | (சுதந்திரத்திற்குப்பின்) | : | ஆர்ச்சிபால்ட் எட்வர்ட் நை |
| சராசரி மழையளவு | : 958.5 மி.மீ. | முதல் இந்திய கவர்னர் | : | கிருஷ்ண குமார சிங்ஜி பவசி |
| வெப்பநிலை | : 18"43" செ | முதல் பெண் கவர்னர் | : | பாத்மிா பீவி |
| இணைய தளம் | : tn.gov.in | முதல் முதல்வர் | : | சுப்பராயலு ரெட்டியார் |
| தமிழ்நாடு பெயர் உருவான நாள் | : 1969, ஜனவரி 14 | முதல் முதல்வர் (சுதந்திரத்திற்குபின்) | : | ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் |
| முதல் கவர்னர் | : வெல்லிங்கடன் பிரபு | முதல்பெண் முதல்வர் | : | ஜானகி ராமச்சந்திரன் |

## அடிப்படைத் தகவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மக்கள் தொகை (2001) | : | 6,24,05,679 | தாலுகாக்கள் | : | 220 |
| ஆண்கள் | : | 3,14,00,909 | ஊராட்சி ஒன்றியங்கள் | : | 385 |
| பெண்கள் | : | 3,10,04,770 | கிராமப் பஞ்சாயத்துக்கள் | : | 12,618 |
| நகர மக்கள் தொகை | : | 2,74,83,998 | மாநகராட்சிகள் | : | 10 |
| கிராம மக்கள் தொகை | : | 3,49,21,681 | நகராட்சிகள் | : | 148 |
| மக்கள் நெருக்கம் | : | 478/ச.கி.மீ. | சட்டசபை இடங்கள் | : | 235 (234+1) |
| ஆண் பென் விகிதம் | : | 986/1000 | லோக்சபை இடங்கள் | : | 39 |
| எழுத்தறிவு பெற்றோர் | : | 4,05,24,545 | ராஜ்யசபை இடங்கள் | : | 18 |
| ஆண்கள் | : | 2,28,09,662 | மாநில விலங்கு | : | நீலகிரி மான் |
| பெண்கள் | : | 1,77,14,883 | மாநில பறவை | : | மரகதப்புறா |
| சராசரி வாழ்நாள்(2006) | : | 70 ஆண்டு | மாநில மரம் | : | பனை |
| மாவட்டங்கள் | : | 32 | மாநில மலர் | : | செங்காந்தள் |
| வருவாய் பிரிவுகள் | : | 76 | மாநில நடனம் | : | பரதநாட்டியம் |
| | | | மாநில விளையாட்டு | : | கபடி |

❄ தமிழில் உலகப் பொது மறையை வடித்த ஒல்காப் புகழ்–திருவள்ளுவர்

❄ 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்று பறைசாற்றிய மீசைக்கார தமிழ்க் கவி பாரதியார்.

❄ அறிவியலுக்கு நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் சர். சி.வி. ராமன்

❄ ஐக்கிய நாடுகள் சபையில் சங்கீத விருந்து படைத்த இந்தியாவின் வைகறைக் குயில் எம்.எஸ். சுப்புலெக்ஷ்மி.

❄ நடிப்புக் கலையின் அனைத்து பரிமாணத்தையும் வெளிப்படுத்திய நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

❄ தமிழகத்தின் நடன வடிவமான பரத நாட்டியம் இந்தியக் கலையின் உன்னதமாக உலக அரங்கில் ஒளிவீசுகிறது.

❄ நாதஸ்வரம் ஒரு மங்கல இசைக் கருவி. ஆச்சா மரத்தில் செய்யபடும் நாதஸ்வரம் தமிழகத்தின் முக்கிய அடையாளம்.

❄ தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தலைநகரமான தஞ்சாவூரில் 17–ஆம் நூற்றாண்டில் பிறந்த கலை மேன்மை தஞ்சாவூர் ஓவியங்கள்.

❄ தமிழ்க் கடவுள் முருகனை ஆடல் பாடலோடு வணங்கும் அற்புதக் கலைவடிவும் காவடியாட்டம்

❄ தென் மாவட்டங்களில் பேணி வளர்க்கப்பட்ட வில்லிசை, திருவிழாக் காலங்களில் நிகழ்த்தப்படும் கிராமியக் கோவில் கலை.

❖❖❖❖❖

# தமிழகத்தின் உச்சங்கள்

- ❖ உயரமான சிகரம் : தொட்டபெட்டா
- ❖ நீளமான ஆறு : காவிரி
- ❖ பெரிய அணைக்கட்டு : மேட்டூர்
- ❖ நீண்ட கடற்கரை : மெரினா
- ❖ பெரிய தேர் : திருவாரூர் தேர்
- ❖ பெரிய பாலம் : பாம்பன் பாலம்
- ❖ பெரிய கோபுரம் : ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம்
- ❖ முதல் பேசும் படம் : காளிதாஸ் (1931)
- ❖ முதல் ரயில் பாதை : ராயபுரம் வாலாஜா
- ❖ முதல் மாநகராட்சி : சென்னை (1688)
- ❖ முதல் தமிழ் நாளிதழ் : சுதேசமித்திரன் (1829)
- ❖ சிறிய மாவட்டம் – சென்னை
- ❖ மக்கள்தொகை அதிகமான மாவட்டம் – சென்னை
- ❖ மக்கள்தொகை குறைவான மாவட்டம் – பெரம்பலூர்
- ❖ மக்கள் நெருக்கம் அதிகமான மாவட்டம் – சென்னை
- ❖ மக்கள் நெருக்கம் குறைவான மாவட்டம் – சிவகங்கை
- ❄ தமிழகத்தின் நடன வடிவமான பரத நாட்டியம் இந்தியக் கலையின் உன்னதமாக உலக அரங்கில் ஒளிவீசுகிறது.
- ❄ நாதஸ்வரம் ஒரு மங்கல இசைக் கருவி. ஆச்சா மரத்தில் செய்யப்படும் நாதஸ்வரம் தமிழகத்தின் முக்கிய அடையாளம்.
- ❄ தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தலைநகரமான தஞ்சாவூரில் 17–ஆம் நூற்றாண்டில் பிறந்த கலை மேன்மை தஞ்சாவூர் ஓவியங்கள்.
- ❄ தமிழ்க் கடவுள் முருகனை ஆடல் பாடலோடு வணங்கும் அற்புதக் கலைவடிவும் காவடியாட்டம்
- ❄ தென் மாவட்டங்களில் பேணி வளர்க்கப்பட்ட வில்லிசை, திருவிழாக் காலங்களில் நிகழ்த்தப்படும் கிராமியக் கோவில் கலை.

❖❖❖❖❖

# இந்தியா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தலைநகரம் | : புதுதில்லி | முதல் பிரதமர் | : ஜவஹர்லால் நேரு |
| மொத்தப் பரப்பு | : 37,87,263 ச.கி.மீ. | முதல் குடியரசுத் தலைவர் | : டாக்டர் ராஜேந்திர பிரசாத் |
| வடக்கு – தெற்கு | : சுமார் 3,214 கி.மீ. | முதல் சபாநாயகர் | |
| கிழக்கு – மேற்கு | : சுமார் 2,933 கி.மீ. | (லோக்சபை) | : ஜி.வி. மாவ்லங்கர் |
| கடற்கரை நீளம் | : 7,561.6 கி.மீ. | முதல் தலைமை நீதிபதி | : ஹரிலால் ஜே. கானியா |
| இந்தியச் செந்தர நேரம் | : +5.30 GMT | முதல் சீஃப் ஆஃப் | |
| வெப் சைட் | : www.india.gov.in | ஆர்மி ஸ்டாஃப் | : ராஜேந்திர சிங்ஜி |
| முதல் இந்திய கவர்னர் | | முதல் தலைமை | |
| ஜெரைல் | : ராஜகோபாலாச்சாரியார் | தேர்தல் சமிஷனர் | : சுகுமார் சென் |

## அடிப்படைத் தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| மக்கள்தொகை (2001) | : 102,87,37,436 | சட்டசபை இடங்கள் | : 4,120 |
| ஆண்கள் | : 53,22,23,090 | தேசிய கீதம் | : ஜனகண மன..... |
| பெண்கள் | : 49,65,13,346 | தேசிய சின்னம் | : அசோகச் சக்கரம் |
| மக்கள் நெருக்கம் | : 325/ச.கி.மீ. | தேசியக் கொடி | : மூவர்ணக் கொடி |
| ஆண்பெண் விகிதம் | : 933/1000 | தேசியக் காலண்டர் | : சுக வருடம் |
| எழுத்தறிவு விகிதம் | : 64.8/– | தேசிய விலங்கு | : புலி |
| சராசரி ஆயுள் | : 64.80 | தேசியப் பறவை | : மயில் |
| மாநிலங்கள் | : 30 | தேசிய மலர் | : தாமரை |
| மத்திய ஆட்சிப்பகுதி | : 6 | தேசிய மரம் | : ஆலமரம் |
| தேசியத் தலைநகரப் பகுதி | : 1 | தேசிய கனி | : மாம்பழம் |
| லோக்சபை இடங்கள் | : 545 (543+2) | தேசிய விளையாட்டு | : ஹாக்கி |
| ராஜ்யசபை இடங்கள் | : 245 (233+12) | தேசிய நாணயம் | : ரூபாய் |

### அதிகார பீடத்தில்

- ❄ குடியரசுத் தலைவர் – பிரதீபா பாட்டீல்
- ❄ துணைக் குடியரசுத் தலைவர் – முஹமது ஹமீத் அன்சாரி
- ❄ பிரதமர் – டாக்டர் மன்மோகன் சிங்.
- ❄ தலைமை நீதிபதி – எஸ்.எஸ். கபாடியா
- ❄ அட்டர்னி ஜெனரல் – குலாம் இ வன்பதி
- ❄ சொலிசிட்டர் ஜெனரல் – கோபால் சுப்ரமணியம்
- ❄ தலைமைத் தேர்தல் கமிஷனர் – எஸ்.ஓய். குரேஷி
- ❄ லோக்சபை சபாநாயகர் – மீரா குமார்
- ❄ லோக்சபை துணை சபாநாயகர் – கரிய முண்டா
- ❄ லோக்சபை எதிர்க்கட்சித் தலைவர் – சுஷ்மா ஸ்வராஜ்
- ❄ ராஜ்யசபை எதிர்க்கட்சித் தலைவர் – அருண் ஜேட்லி
- ❄ ராஜ்யசபை துணைத் தலைவர் – கே. ரஹ்மான் கான்
- ❄ இரயில்வே போர்டு சேர்மன் – விவேக் ஸஹாய்

- ❇ ரிசர்வ் வங்கி கவர்னர் – டி. சுப்பராவ்
- ❇ மத்திய விஜிலென்ஸ் கமிஷனர் – பி.ஜே.தாமஸ்

**காலச்சுவடுகள்**

- ❇ 1912 தலை நகரம் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாற்றப்பட்டது.
- ❇ 1913 தாகூருக்கு நோபல் பரிசு
- ❇ 1947 சுதந்திர தினம் (ஆகஸ்ட் 15)
- ❇ 1947 முதல் பாகிஸ்தான் போர்
- ❇ 1950 குடியரசு தினம் (ஜனவரி 26)
- ❇ 1962 சீனப் போர் (அக்டோபர்)
- ❇ 1970–கள் பசுமைப் புரட்சி
- ❇ 1974 முதல் அணு சோதனை 'புன்னகைக்கும் பத்தர்' (ஆகஸ்டு 20)
- ❇ 1975 முதல் செயற்கைக்கோள் ஆர்ய பட்டா விண்ணிற்கு (ஜுன் 12)
- ❇ 1983 முதல் உலகக்கோப்பை கிரிக்கெட் மகுடம்
- ❇ 1968 'ப்ருத்வி' தரையிலிருந்து தரைக்கான ஏவுகணை சோதனை
- ❇ 1998 பொக்ரான் – 2 அணுசோதனை 'ஆபரேஷன் சக்தி' (மே 11)
- ❇ 2003 நிலவுப் பயணம் சந்திராயன் – 1
- ❇ 2009 ரஹ்மானுக்கு ஆஸ்கர்
- ❇ 2010 ஒலியைவிட மூன்று மடங்கு வேகத்தில் செல்லும் சூப்பர்சானிக் பிரஹ்மாஸ் ஏவுகணை வெற்றிகர சோதனை

**இந்தியாவின் சில உச்சங்கள்**

- ❖ நீளமான நதி : கங்கை
- ❖ உயரமான சிகரம் : K2 (18611 மீ.)
- ❖ நீளமான தேசிய நெடுஞ்சாலை – NH 7
- ❖ நீளம் குறைந்த தேசிய நெடுஞ்சாலை – NH 47
- ❖ நீளமான ரயில் பாதை : கன்னியாகுமரி – காஷ்மீர்
- ❖ கடற்கரை நீளம் : 7,516.6 கி.மீ.
- ❖ மிக வெப்பமான பகுதி : ராஜஸ்தான், பிகானீர் மாவட்டம், பிர்யாவாலி; அதிக பட்ச வெப்பநிலை : 56"C
- ❖ மிகக்குளிரான பகுதி : ஜம்மு காஷ்மீர் மாவட்டத்தின் திராஸ் பகதி. குறைந்த பட்ச வெப்பநிலை : –45"C
- ❖ மக்கள் நெருக்கம் மிகுந்த மாநிலம் : மேற்கு வங்காளம் (903/ஒரு ச.கி.மீ.)
- ❖ மக்கள் நெருக்கம் மிகக் குறைவான மாநிலம் : அருணாசல் (13/ஒரு ச.கி.மீ.)
- ❖ மக்கள்தொகை மிகுந்த மாநிலம் : உத்தரப் பிரதேசம் (16,61,97,921)
- ❖ மக்கள்தொகை குறைந்த மாநிலம் : சிக்கிம் (5,40,851)
- ❖ மிகப் பெரிய மாநிலம் : ராஜஸ்தான்
- ❖ மிகச் சிறிய மாநிலம் : கோவா
- ❖ எழுத்தறிவு மிகுந்த மாநிலம் : கேரளம்
- ❖ எழுத்தறிவு குறைந்த மாநிலம் : பீகார்

❖❖❖❖❖

# உலகம்

| | | |
|---|---|---|
| பூமியின் மொத்தப் பரப்பு | : | 36.10 கோடி ச.கிமீ. |
| பூமியின் மொத்த நிலப் பரப்பு | : | 14.84 கோடி ச.கிமீ. |
| மக்கள்தொகை | : | 661.59 கோடி |
| மொத்த கண்டங்கள் | : | ஏழு |
| ஐ.நா. உறுப்பு நாடுகள் | : | 192 |

**கிரீன்பீஸ் அமைப்பு (Greenpeace Foundation)**

உலக அளவில் செயல்திறம் மிகுந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கூட்டமைப்பு. 46 நாடுகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வமைப்பின் தலைமையகம் ஆம்ஸ்டர்டாமில் அமைந்துள்ளது. அமெரிக்கா அலாஸ்காவில் நடத்திய அணு சோதனையை கைவிடவேண்டும் என்னும் கோரிக்கையுடன் 1971–இல் துவங்கப்பட்டது.

**உலகின் சில உச்சங்கள்**

- ❖ மிகப் பெரிய கண்டம் : ஆசியா
- ❖ மிகச் சிறிய கண்டம் : ஆஸ்திரேலியா
- ❖ மிகப் பெரிய நாடு : ரஷ்யா
- ❖ மிகச் சிறிய நாடு வாடிகன் நகரம்
- ❖ அதிக மக்கள் தொகை நாடு சீனா
- ❖ குறைந்த மக்கள் தொகை நாடு : வாடிகன் நகரம்
- ❖ மிக உயர்ந்த பகுதி : எவரெஸ்ட் சிகரம், நேபாளம்
- ❖ மிகத் தாழ்ந்த பகுதி : சாக்கடல், ஜோர்டான்
- ❖ மிகப் பெரிய பாலைவனம் : சஹாரா, வட ஆப்பிரிக்கா
- ❖ மிக வெப்பமான பகுதி : தலோல், எத்தியோப்பியா
- ❖ மிகக் குளிரான பகுதி : பிளோட்டோ, ஸ்டேஷன், அண்டார்டிகா (–56.7°)
- ❖ மிக அதிகம் கடற்கரை கொண்டுள்ள நாடு : கனடா
- ❖ மிக அதிக எல்லைகள் கொண்ட நாடுகள் : ரஷ்யா, சீனா
- ❖ பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதல் நாடு : நியூசிலாந்து
- ❖ மிகப் பெரிய தீவு : கிரீன்லாந்து
- ❖ மிகப் பெரிய நதி : அமேசான்
- ❖ மிக நீளமான நதி : நைல்
- ❖ மிகப் பெரிய ஏரி : காஸ்பியன் கடல்
- ❖ மிகப் பெரிய கடல் : பசிபிக்கடல்
- ❖ நீளமான இரயில்பாதை : டிரான்ஸ் சைபீரியன் இரயில்பாதை
- ❖ நீளமான சுவர் : சீனப் பெருஞ்சுவர்
- ❖ நீளமான சுரங்க சாலை : மௌன்ட் பிளாங்க், பிரான்ஸ்–இத்தாலி

- ❖ மிகப்பெரிய தீபகற்பம் : சௌதி அரேபியா
- ❖ மிகப்பெரிய அருங்காட்சியகம்ஃ பிரிட்டீஷ் அருங்காட்சியகம்
- ❖ மிகப்பெரிய சதுப்பு நிலப்பகுதி : சுந்தர வனம், வங்காளதேசம
- ❖ மிக உயரமான விலங்கு : ஒட்டகச் சிவிங்கி
- ❖ மிகப்பெரிய பறவை : நெருப்புக் கோழி
- ❖ மிக வேகமான பறவை : நெருப்புக் கோழி
- ❖ மிக வேகமான விலங்கு : சீட்டா
- ❖ மிகப்பெரிய உயிரினம் : நீலத் திமிங்கலம்

❈ பிளாட்டோ (கி.மு.427–347) : மேற்கத்திய தத்துவ மரபுக்கு அடித்தளம் அமைத்த கிரேக்க தத்துவஞானி. சாக்ரட்டீஸின் சீடர், அரிஸ்டாடிலின் குரு. இவர் நிறுவிய அகாடமஸ் (Academos) என்னும் கல்வி நிறுவனத்திலிருந்துதான் அகாடமி (Academy) என்னும் சொல் உருவானது. ரிபப்ளிக்லாஸ் (Laws) , சிம்போஸியம் (Symposium) இவரது நூல்கள்.

❈ பிதோவன் (கி.பி. 1770 – 1827) : ஜெர்மனியில் பிறந்த இந்த ‘பியானோ மந்திரவாதி’ வியன்னாவில் ஒரு முழுக் கலைஞனாக உருப்பெற்றார். இரோயிகா (சிம்பொனி), ஃபிடலியோ (ஒபேரா) போன்றவை இவர் கேட்கும் திறன் இழந்த பின்பு உருவாக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

❈ ஹிட்லர் கி.பி. (1889–1945) : ஆஸ்திரியாவில் பிறந்து, ஜெர்மனியின் சர்வாதிகாரியான நாஸிக் கட்சித் தலைவர். இவரது சுயசரிதை மெய்ன் கம்ப். ஹோலோகாஸ்ட் இலட்சக்கணக்கான யூதர் படுகொலையின் சாட்சி. உலகை உலுக்கிய இந்த சர்வாதிகாரம் தற்கொலையில் முடிந்தது.

❈ சிரிமாவோ பண்டார நாயகே (1916–2000) உலகின் முதல் பெண் பிரதமர். 1960–65, 1970–77, 1994–2000 என மூன்றுமுறை இலங்கைப் பிரதமராகப் பதவி வகித்தவர். இலங்கை முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்காவின் தாய்.

❈ உலகின் மிகப் பெரும் இராணுவம் : மக்கள் விடுதலைப்படை (People’s Liberation Army) : சீனாவின் முப்படைகளும் ஒன்றிணைந்து 1927 – இல் உருவாக்கப்பட்டது. முப்பது இலட்சத்துக்கும் அதிகமான படை வீரர்களைக் கொண்டது. 18வயது பூர்த்தியான இளைஞர்கள் விடுதலைப் படையில் பணியாற்ற வேண்டியது அவசியம்.

❈ விந்தையான விலங்கு : கங்காரு குட்டிகளைச் சுமந்து செல்ல அடிவயிற்றில் பையைக் கொண்டுள்ள இது, ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்கு. லெப்டினன்ட்குக் என்பவரே இதற்கு Kangaroo (பழங்குடி மொழியில்) எனப் பெயர் வழங்கினார்.

❈ உலகின் மிகப் பழமையான தேசியக் கொடி : டென்மார்க் தேசியக் கொடி (Dannebrog). சிவப்பு பின்புலத்தில் வெண்மை நில ஸ்காண்டி நேவியன் சிலுவை கொண்டது. பதினான்காம் நூற்றாண்டு முதல் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அளவு 26:37

❈ உலகின் மிக உயரமான கட்டிடம் : புர்ஜ் காலிஃபாடு துபாயில் உள்ள இக்கட்டிடம் 878மீ. உயரமானது. 2010 ஜனவரி நான்காம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

❖❖❖❖❖

# அறிவியல் தொழில் நுட்பம்

ஏபல் பரிசு 2010: (கணிதத்தில் வாழ்நாள் சாதனை படைத்தவர்களுக்கு வழங்கப்படுவது.) ஜான் டோரன்ஸ் டாட்டே. அமெரிக்க கணிதவியலாளர். (பரிசுத்தொகை சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்)

(ஏபல் பரிசு 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்தியாவில் பிறந்த எஸ்.ஆர். ஸ்ரீனிவாசவரதன், நியூயார்க் – 2007 இல் இவ்விருது பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது).

சேரன் விருது பரிசு ($ பரிசுத் தொகை 5,00,000) : புகழ்பெற்ற சீன – அமெரிக்க கணிதவியலாளர் ஷிங்–ஷென் சேரன் அவர்கள் நினைவாக சர்வதேச கணித வட்டமைப்பால் வழங்க்கப்படுவது. பேரா. லூயிஸ் நிரண்பெர்க்.

ஆலன் டி. வாட்டர்மேன் விருது 2010 (தேசிய அறிவியல் அமைப்பு, அமெரிக்கா) : பரிசு ஐந்து இலட்சம் டாலர். இந்திய–அமெரிக்க கம்ப்யூட்டர் விஞ்ஞானி சுபாஷ் கோட்.

எம்.எஸ். சுவாமிநாதன் சிறந்த வேளாண் விஞ்ஞானி விருது : டாக்டர் சுப்பிரமணியம் நாகராஜன்.

வருடத்தின் சிறந்த விஞ்ஞானி (DRDO) : பி. கனகராஜன்.

இன்ஃபோசிஸ் பரிசு 2010 : பரிசு தலா ரூ.50,00,000. சந்தீப் த்ரிவேதி (இயற் அறிவியல்), சந்திரசேகர் கரே (கணித அறிவியல்), சேதன் இ. சிட்னிஸ் (உயிர் அறிவியல்), அஷிதோஷ் சர்மா (பொறியியல் கணிப்பொறி தொழில்நுட்பம்), அபிஜித் வினாயக் பான்ர்ஜி மற்றும் அமிதா பவிஸ்கர் மற்றும் நந்தினி கந்தர் (சமூக அறிவியல் – இருவரும் இப்பரிசை பங்கிடுகின்றனர்).

கர்ஷகஸ்ரீ விருது (மலையாள மனோரமா) : பரிசு ரூ.2,00,000 சன்னி ஜார்ஜ்.

சாந்தி சுவரூப் பட்நாகர் விருது 2010 : டாக். சஞ்சீவ் காலண்டே மற்றும் டாக். சுபா டோல் (உயிர் அறிவியல்); டாக். ஸ்வப்பான் கே. பதி மற்றும் டாக். சந்தீப் வர்மா (வேதி அறிவியல்); டாக். ஜி.கே. அனந்த சுரேஷ் மற்றும் டாக். சங்கமித்ரா பாண்டோபத்யாயா (பொறி அறிவியல்); டாக். உ மேஷ்வாசுதேவ் பாக்மாரே மற்றும் டாக். கலோபரன் மைதி இயற் அறிவியல்).

**ரவீந்திரநாத் தாகூர் அமைதி விருது – 2010**

இரோம் சானு ஷர்மிளா, பாதுகாப்புப் படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தி மணிப்பூரில் பத்து ஆண்டுகளாக உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடரும் பெண்மணி, பரிசுத் தொகை ரூ.51 இலட்சம். (இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் பிளானிங் அண்ட் மேனேஜ்மென்ட் வழங்குவது).

❖❖❖❖❖

# நோபல் பரிசு 2010

## இலக்கியம்

மரியோ வர்கஸ் லோசா : பாராட்டுரை : அதிகார அமைப்புகளை தமது சுவையான எழுத்தால் எடுத்துகாட்டும் திறன், தனி மனிதன் தோல்வி, பயம், கவலை போன்றவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டும் பாங்கு.

படைப்புகள் : முப்பதுக்கும் மேற்பட்ட கலைகள், நாடகங்கள், கட்டுரைகளை எழுதியுள்ளார். Conversation in the cathedral, an House. The Beast of the Code, இவரது முக்கிய படைப்புகளுல் சில. மரியோ எழுத்தாளர் காப்ரியல் கார்சியா விற்குப்பிறகு (1982) இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெறும் முதல் தென்னமெரிக்க எழுத்தாளர். தற்போது நியூ ஜெர்ஸி பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய்ப் பணியாற்றுகிறார்.

## அமைதி

லியி ஷியோபோ (54), சீனா நோபல் பாராட்டுரை : 130 கோடி சீன மக்களின் மனித உரிமைகளுக்காக மிக நீண்ட காலமாக போராடி வருவதற்கு.

**குறிப்புகள் :** கருத்துச் சுதந்திரம், நேர்மையான தேர்தல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய 'சாசனம் 2008' என்னும் உரிமை ஆவணத்தை சக ஆதரவாளர்களுடன் இணைந்து உருவாக்கினார் லியு. சீன அரசியல் ஜனநாயக முறைக்கு மாறுவதை இனியும் தள்ளிப்போடமுடியாது என்று இந்த ஆவணம் தெரிவிக்கிறது. 'ஒரு கிரிமினல் குற்றவாளிக்கு இந்த விருதை அளித்து அதை களங்கப்படுத்திவிட்டது நோபல் சுமிட்டி' என்று சீனா இதற்கு கண்டனம் வெளியிட்டது. ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தார் என்னும் குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர் லியு.

## இயற்பியல்

ஆண்ட்ரீ கெய்ம் (51), நெதர்லாந்து

நொவோ செலேவ் (36), ரஷ்யா/பிரிட்

**நோபல் பாராட்டுரை :** அணு அளவு தடிமன் கொண்ட கிராஃபீன் என்னும் கார்பனை உருவாக்கியமைக்காக. இந்த கிராஃபீன் தாமிரத்துக்கு நிகராக வெப்பத்தைக் கடத்தும் திறம் மிக்கது. இந்தக் கண்டுபிடிப்பு மின்னணுவியல் துறையில் பல புதுமைகளுக்கு களம் அமைக்கும்.

**குறிப்பு :** ஆண்ட்ரி கெய்ம், நொவோ இருவரும் ரஷ்யப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்தவர்கள். தற்போது மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

### வேதியியல்

ரிச்சர்டு எஃப் ஹெக் (79) அமெரிக்கா

ஐயிஷி நெகிஷி (75), ஜப்பான்

அகிரா கஸீகி (80), ஜப்பான்

**நோபல் பாராட்டுரை :** கார்பன் அணுக்களை பலேடியத்தின் வினை ஊக்கியாகப் பயன்படுத்தி பிணைக்கும் வழிமுறையைக் கண்டு பிடித்துள்ளனர். இக் கண்டுபிடிப்பு புற்றுநோய் சிகிச்சைக்கான புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கவும், பல புதுமையான பயன்பாடுகளுக்கு உதவும் பிளாஸ்டிக்குகளை தயாரிக்கவும் பெரிதும் உதவும்.

**குறிப்பு :** ரிச்சர்டு எஃப் ஹெக் டெலாவர் பல்கலைக் கழகத்தில் கௌரவ பேராசிரியராகவும், ஐயிஷி நெகிஷி பர்டியூ பல்கலைக் கழகத்திலும், அகிரா கஸுகி ஹொக்கைடா பல்கலைக்கழகத்திலும் தொடர்பு கொண்டுள்ளனர்.

### மருத்துவம்

ராபர்ட் எட்வர்ட்ஸ் (35), பிரிட்டன்

**நோபல் பாராட்டுரை :** சோதனைக் குழாய் மூலம் குழந்தைகளைப் பிறக்கச் செய்யும் முறைகளை மேம்படுத்தியமைக்காக. இந்தச் சாதனையால் உலகம் முழுவதும் குழந்தை பாக்கியம் இல்லாத இலட்சக்கணக்காக தம்பதிகள் குழந்தை பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**குறிப்பு :** கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிவரும் ராபர்ட் எட்வர்ட்ஸ் நோய்வாய்ப்பட்டுள்ளார்.

### பொருளாதாரம்

பீட்டர் ஏ. டைமன்ட் (70), அமெரிக்கா

டேல் டி. மார்டட்சென் (71), அமெரிக்கா

கிறிஸ்டோபர் ஏ. பிஸாரைட்ஸ் சைப்ரஸ்/பிரிட்டன்

**நோபல் பாராட்டுரை :** பொருளாதாரக் கொள்கைகள் எந்த அளவுக்கு வாய்ப்பின்மையை உருவாக்குகிறது என்பது குறித்தும், அதற்கான தீர்வுகள் குறித்ததுமான ஆய்வு முடிவுகளை வெளியிட்டமைக்காக.

**குறிப்பு :** பீட்டர் ஏ. டைமண்ட் மசாசூசெட் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், டேல்டி. மார்டட்சென் வடமேற்கு பல்கலைகழகத்தில் பேராசிரியராகவும், கிறிஸ்டோ. ஏ. பிஸாரைட்ஸ் லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் பேராசிரிராகவும், நார்மன் சாஸ்னோ சேர்ஆஃப் எகனாமிக்ஸ் அமைப்பின் பொருளாதார ஆய்வு மைய இயக்குனராகவும் பணியாற்றுகின்றார்.

❖❖❖❖❖

## நோபல் செய்திகள்

- ❖ லாரல் மரக்கிளைகளால் (Laural Tree) உருவாக்கப்பட்ட கிரீடம் அணிபவர்கள் 'லாரட்ஸ்' (Laurets) என்று அழைக்கப்பட்டார்கள். அப்பல்லோ தேவன் இக் கிரீடம் அணிந்தவர் என்பது கிரேக்கர்களின் நம்பிக்கை. அதனால், மரியாதை நிமித்தமாக நோபல் பரிசு பெற்றவர்கள் 'நோபல் லாரட்ஸ்' என்று அழைக்கப்படுகிறார்கள்.
- ❖ நோபல் பரிசு என்பது பாராட்டுப் பத்திரம் (Nobel Prize Diploma), பதக்கம் மற்றும் பரிசுத் தொகையைக் குறிப்பிடும் சாட்சிப் பத்திரம் ஆகிய மூன்றும் அடங்கியது.
- ❖ பாராட்டுப் பத்திரத்தில் ஆல்பிரெட் நோபலின் படம் இடம் பெற்றிருக்கும். 1980–க்கு முன்பு வரை பதக்கம் 23 காரட் தங்கத்தால் உருவாக்கப்பட்டது. இப்போது அது 18 காரட்டில் 24 காரட் தங்க மூலம் பூசப்பட்டது.
- ❖ 2009–இல் நோபல் பரிசுத் தொகை பத்து இலட்சம் அமெரிக்க டாலருக்கும் அதிகமாக இருந்தது.
- ❖ நோபல் பரிசு சுவீடன் மன்னரால் வழங்க்ப்படுகிறது. அமைதிக்கான நோபல் பரிசு தவிர (ஒஸ்லோவில் வழங்கப்படுகிறது) ஏனைய அனைத்தும் ஸ்டாக்ஹோமில் நடைபெறும் விழாவில் வழங்கப்படுகிறது.

❖❖❖❖❖

## கிராமி விருது

இசை உலகின் ஆஸ்கார் விருது எனக் கருதப்படுகிறது. அமெரிக்காவின் நேஷனல் அகாடமி ஆஃப் ஆர்ட்ஸ் அன்ட் சயின்சஸ் எனும் அமைப்பு இவ்விருதை வழங்குகிறது. 2009 ஆம் ஆண்டுக்கான விருதாளர்கள் பட்டியலில் ஆஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மானும் இடம் பெற்றுள்ளார். இரண்டு கிராமி விருதுகள் – ஸ்லம் டாக் மில்லினியர் படத்திற்கு பின்னணி இசையமைத்ததற்காக ஒரு விருதும், அப்படத்தில் இடம் பெற்ற ஜெய்ஹோ என்னும் பாடலுக்கு இசையமைத்ததற்காக மற்றொரு விருதும் (பாடலாசிரியர் குல்சாகும் இவ்விருதைப் பகிர்ந்து கொள்கிறார்) ஏ.ஆர் ரஹ்மானுக்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் ஒரே நேரத்தில் இரண்டு கிராமி விருதுகளைப் பெற்ற ஒரே இந்தியர் என்ற பெருமை பெற்றார் ரஹ்மான்.

அமெரிக்க பாப் இசைப் பாடகி பியோன்ஸ் நோலஸ் பாடிய சிங்கிள் லேடீஸ்.... எனும் பாடல் 2009 ஆண்டின் சிறந்த பாடலுக்காக கிராமி விருது பெற்றது. இவருக்குக் கிடைத்த மொத்த கிராமி விருதுகள் ஆறு.

2009 ஆம் ஆண்டு காலமான பாப் பிரபலம் மைக்கேல் ஜாக்சனுக்கு வாழ்நாள் சாதனைவிருது (ஜாக்சனின் மகன்கள் இவ்விருதைப் பெற்றுக் கொண்டனர்).

இதற்கு முன் இவ்விருது பெற்ற இந்தியர்கள் பண்டிட் ரவி சங்கர் (சிதார்), ஜாகீர் உரை(தபேலா), விக்கு வினாயக் மற்றும் விலை மோகன் பட்.

❖❖❖❖❖

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

பூக்களின் நகரம் என அழைக்கப்படும் சீனாவின் குவாங்ஷுவில் 2010 நவம்பர் 12 முதல் 27 வரை போட்டிகள் வெகு விமரிசையாக நடைபெற்றன. 45 நாடுகளைச் சேர்ந்த, 11,700 விளையாட்டு வீரர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். மொத்த விளையாட்டு இனங்கள் 42. மொத்த தங்கப் பதக்கங்கள் 476. கிரிக்கெட், செஸ், படகுப்போட்டி என்று அனைத்து விளையாட்டு இனங்களும் குவாங்ஷு ஆசியப் போட்டியில் இடம் பெற்றன. 'டான்ஸ் ஸ்போட்ஸ்' என்னும் நடன வடிவம் பார்வையாளர்களுக்கு விருந்தூட்டியது.

இப் போட்டியில் 199 தங்கம், 119 வெள்ளி, 98 வெண்கலப் பதக்கங்களுமாக மொத்தம் 416 பதக்கங்களை வென்று சீனா முதலிடம் பெற்றது. இரண்டாமிடம் 232 பதக்கங்கள் பெற்ற தென் கொரியாவுக்கு. மூன்றாமிடம் ஜப்பான் (216 பதக்கங்கள்).

### ஆசியப் போட்டி – 2010 – பதக்கப்பட்டியல்

| நாடு | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| சீனா | 109 | 119 | 98 | 416 |
| தென் கொரியா | 76 | 65 | 91 | 232 |
| ஜப்பான் | 48 | 74 | 94 | 216 |
| இரான் | 20 | 14 | 25 | 59 |
| கஸாக்ஸ்தான் | 18 | 23 | 38 | 79 |
| **இந்தியா** | 14 | 17 | 33 | 64 |

### குவாங்ஷுவில் இந்தியாவின் தங்க நட்சத்திரங்கள்

- ப்ரிஜா ஸ்ரீதரன் : 10,000 மீட்டர் ஓட்டம்
- சுதா சிங் : 3.000 மீட்டர் ஸ்ட்ப்பின் சேஸ்
- ஜோஸஃப் ஜி. ஆப்ரஹாம் : 400 மீ. தடை தாண்டல்
- ஏ.சி. ஆஸ்வினி : 4 x 400 மீ.ரிலே

  மன்ப்ரீத் கௌர், மஞ்ஜித் கௌர், சினி ஜோஸ்,

  ஏ.சி. அஸ்வினி சிதானந்தா
- பங்கஜ் அத்வானி : இங்கிலீஷ் பில்லியாட்ட்ஸ் ஒற்றையர்

- ❖ பஸ்ரம்ங்லால் தக்கர் : துடுப்புப் படகு, ஒற்றையர்
- ❖ ரேஞ்ஜன் ஸோதி : இரட்டை ட்ராப் ஷூட்டிங்
- ❖ சோம்தேவ் தேவ்வர்மன், சனம் சிங் : டென்னிஸ் இரட்டையர்
- ❖ சோம்தேவ் தேவ்வர்மன் : டென்னிஸ் ஒற்றையர்
- ❖ ஆண்கள் குழு : கபடி
- ❖ விகாஸ் கிருஷ்ணன் : குத்துச் சண்டை (60 கிலோ)
- ❖ விஜேந்தர் சிங் : குத்துச் சண்டை (75 கிலோ)

**இந்தியா @ 64**

தனது 59 வருட கால ஆசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் மொத்தம் 64 பதக்கங்களை வென்று புதிய சாதனை படைத்து. இதில் தங்கம் –14, செள்ளி – 17, வெண்கலம் – 33. குவாங்ஷூ ஆசிய விளையாட்டில் இந்தியாவுக்கு ஆறாமிடம்.

❖ இதற்கு முன்னால் 1982–இல் தில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டில் 33 தங்கம, 19 வெள்ளி, 25 வெண்கலம் என்று மொத்தம் 57 பதக்கங்கள் வென்றதே இந்தியாவின் அதிகபட்ச சாதனை.

❖ 1951 முதல் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா 15 தங்கம் வென்றது.

**இந்தியா களமொருக்கிய சில விளையாட்டுப் போட்டிகள்**

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் : 1961, 1982, புதுதில்லி. ஆப்ரோ – ஆசிய விளையாட்டுப் போட்டிகள் : 2003, ஹைதிராபாத். ஆசியபராக் அன்டஃபீல்டு மீட்: 1989, புது தில்லி கிரிக்கெட் உலகக் கோப்பை (இரண்டு முறை) : ரிலையன்ஸ் உலகக் கோப்பை – 1987, இந்தியா – பாகிஸ்தான் வில்ஸ் உலகக் கோப்பை – 1996, இந்தியா – பாகிஸ்தான் – இலங்கை. 2011 உலகக் கோப்பை : 2011, இந்தியா – இலங்கை – வங்காளதேசம்

**அதிர்ஷ்டச் சின்னம்**

குவாங்ஷூ நகரில் (சீனா) நடைபெற்ற 16–ஆம் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் அதிர்ஷ்டச் சின்னம் ஐந்து ஆட்டுக் குட்டிகள். இவற்றில் தலைமை ஆட்டின் பெயர் லே யாங்யாங். இந்த ஐந்து ஆட்டுக் குட்டிகளின் பெயர் தரும் செய்தி : 'சாந்தி, சந்தோஷம், ஐஸ்வரியம்.... எல்லாம் உங்கள் விருப்பம் போல'.

❖❖❖❖❖

# உழைப்பே முதலீடு

– சிந்தனைக் கவிஞர், முனைவர் கவிதாசன்

அலைந்து அலைந்து
சலித்து விட்டோம்
என்று
அலைகள் ஒரு நொடியேனும்
ஓய்வெடுத்தது உண்டா ?
சுற்றிச்சுற்றி
சோர்வு அடைந்து விட்டேன்
என்று
பூமி ஒரு நாளேனும்
படுத்துக் கொண்டது உண்டா ?
உழைத்து உழைத்து
களைத்து விட்டேன்
என்று
சூரியன் ஒரு பகலேனும்
பர்மிஷன் போட்டதுண்டா ?
எண்ணிப் பாருங்கள்
ஓய்வெடுத்துத் தேய்வதை விட
உழைத்துத் தேய்வதே
உயர்வானது
ஓயாமல் உழைப்பவர்களே
தொடர்ந்து முன்னேறுகிறார்கள்
தொடர்ந்து முயற்சித்தால்
மென்மேலும் உயர முடியும்!
உழைப்பைப் புறக்கணித்துவிட்டு
உயர்வெனும் ஏணியில்
யாராலும் ஏற முடியாது
உழைப்பே
முன்னேற்றத்திற்கு
நாம் செய்யும் முதலீடு!
விதைக்காமல்
விளைச்சல் இல்லை!
உழைக்காமல்
முன்னேற்றம் இல்லை

❖❖❖❖❖

# சமையல் கலை

கொள்ளு சப்பாத்தி
தேவையான பொருட்கள்
(இரண்டு பேருக்கு)

| | | |
|---|---|---|
| கோதுமை மாவு | – | 200 கிராம் |
| கொள்ளு | – | 50 கிராம் |
| வெங்காயம், கோஸ், கேரட் பீன்ஸ், உருளைக்கிழங்கு, தக்காளி (நறுக்கியது) | – | 50 கிராம் |
| இஞ்சி, ப.மிளகாய் விழுது | – | 2 தேக்கரண்டி |
| கடுகு | – | 1 தேக்கரண்டி |
| உ. பருப்பு | – | 1 தேக்கரண்டி |
| க. பருப்பு | – | 1 தேக்கரண்டி |
| நெய் | – | தே. அளவு |
| எண்ணெய் | – | தே. அளவு |

செய்முறை :

கோதுமை மாவில் சப்பாத்தி தயார் செய்து கொள்ளவும். கொள்ளை வறுத்து, உடைத்து வேக வைக்கவும். நன்கு வெந்து வந்தவுடன், தண்ணீரை வடிகட்டி, விழுதுபோல் ஆக்கி கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு, கடுகு, உளுத்தம் பருப்பு, கடலை பருப்பு இவற்றை தாளித்து, இத்துடன் நறுக்கிய காய்கறிகையும், கொள்ளு விழுதையும் போட்டு வதக்கவும். இல்கலவையை சப்பாத்தியின் மேல் விரவி, அதற்கு மேல் மற்றுமொரு சப்பாத்தியை வைத்து மூடி, நெய் ஊற்றி சுட்டெடுத்தால் சுவையான, சத்தான கொள்ளு சப்பாத்தி தயார்.

❖❖❖❖❖

# புகைப்படக் கலையின் கதை!

வேதிப்பொருள் பூசப்பட்ட உலோகத் தகட்டில் உருவங்களைப் பதிவு செய்யும் முறையைப் பிரெஞ்சுக்காரரான ஜோசப் நீப்சே 1826–ம் ஆண்டு கண்டுபிடித்தார். அதன்பிறகு புகைப்படக் கலையின் வளர்ச்சி விசுவரூபம் எடுத்தது. 1839–ல் இன்னொரு பிரெஞ்சுக்காரரான லூயிஸ் டாக்ரே, அதே விஷயத்தை இன்னும் சிறப்பாகச் செய்தார். அவரது முறைப்படி எடுத்த படங்கள் இன்றும் பத்திரமாக இருக்கின்றன. இந்த இருவரின் முறையிலும் இருந்த ஒரே பிரச்சினை, ஒரே ஒரு படம்தான் கிடைக்கும் என்பது. அவற்றை நகல் எடுக்க வழியில்லை.

1839–ம் ஆண்டிலேயே வில்லியம் பாக்ஸ் டால்போட் என்பவர் 'நெகட்டிவ்' - 'பாசிட்டிவ்' முறையைக் கண்டுபிடித்துவிட்டார். அதன்மூலம் இஷ்டம் போல தேவையான எண்ணிக்கைக்கு 'பிரின்ட்' போட முடிந்தது.

1888–ல், சாதாரண மக்களும் பயன்படுத்தும் வகையிலான காமிராவை அமெரிக்கரான ஜார்ஜ் ஈஸ்ட்மென் தயாரித்தார். அவரது காடாக் நிறுவனம், 100 படங்கள் எடுக்கும் அளவுக்கு பிலிமை உள்ளடக்கிய காமிராவை உருவாக்கியது.

அப்போது, புகைப்படங்கள் எடுத்தபிறகு காமிராவை அப்படியே அவர்களின் தொழிற்சாலைக்கு அனுப்பி 'பிராசஸ்' செய்ய வேண்டும். சில ஆண்டுகளுக்குப் பின், புகைப்படக்காரரே பிலிமை 'லோடு' செய்யும் முறை வந்தது. அதன்பிறகு எல்லாமே எளிதாகிவிட்டது.

இப்போது பிலிமை மட்டுமல்ல, லென்ஸ்களைக் கூட நொடியில் மாற்றிவிட முடியும். அத்துடன் பிலிமே இல்லாத 'டிஜிட்டல் போட்டோகிராபி' தான் இன்று பிரபலமாக உள்ளது.

❖❖❖❖❖

## நினைவாஞ்சலி



சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவரும், முன்னாள் சங்கத் தலைவருமான கொங்குக் குலமணி அமரர் கே.ஆர்.பி.மோகன் அவர்கள் மறைந்து ஓராண்டு நிறைவுற்றதை யொட்டி, நமது சங்கத்தின் வெள்ளிவிழா இல்லத்தில் 24–01–2011 அன்று நினைவாஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சங்கத்தலைவர் பரணி கே.பாலசுப்பிரமணி அவர்கள் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியின் போது அமரர் மோகன் அவர்களுடைய திருவுருவப் படத்திற்கு அனைவரும் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சங்க நிர்வாகிகளும், கொங்குச் சொந்தங்களும் அமரர் மோகன் அவர்களுடைய உயர் பண்புகளையும், சமுதாயத் தொண்டினையும் இன உணர்வையும் நினைவு கூர்ந்தனர்.

தீரன் சின்னமலை மாளிகையின் ஒரு தளத்திற்கு அமரர் மோகன் அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | A. பாலமுருகன் M.Sc., (Chemistry) |
| தந்தை பெயர் | : | M. அர்த்தனாரீஸ்வரர், Rtd. Income Tax Inspector, Ch - 34 |
| தாயார் பெயர் | : | ஜோதி, House Wife |
| பிறந்த தேதி | : | 23–11–80 |
| ஊர் | : | உஞ்சணை மேட்டுப்பாளையம்<br>குமாரமங்களம் (அஞ்சல்), நாமக்கல் மாவட்டம்<br>(தற்போது சென்னையில் நிரந்தரக் குடியிருப்பு) |
| குலம் | : | பண்ணைகுலம் |
| இராசி | : | ரிஷபம் |
| உயரம் / நிறம் | : | 5"8'' / மாநிறம் |
| லக்னம் | : | ரிசிபம் |
| நட்சத்திரம் | : | மிருகசீரிடம் 1 ஆம் பாதம் |
| பிறந்த இடம் | : | சென்னை |
| பிறந்த நாள் | : | ரௌத்திரி வருசம், கார்த்திகை மாதம், 8ஆம் தேதி<br>(23–11– 80) |
| உடன் பிறந்தோர் | : | அண்ணன் – 1, திருமணம் ஆனவர், தம்பி – 1, U.S.Aல் உள்ளார் |
| சொத்து விவரம் | : | சென்னையில் சொந்த வீடு (11 சென்ட்டில்)<br>சென்னையில் காலி மனை – 18 சென்ட் |
| பணிபுரியம் இடம் | : | Ranboxy Laboratories, as Senior Research Scientist<br>Goargan, New Delhi. |
| சம்பளம் | : | Rs. 42000 pm |
| தொலைபேசி எண் | : | 044 24817954, 94442 21772, 98402 70232 |

| | | | |
|---|---|---|---|
| | | சந்<br>ல | |
| | இராசி | | ரா |
| கேது | | | |
| செவ் | சூரி | புத<br>சுக் | குரு<br>சனி |

| | | | |
|---|---|---|---|
| புத<br>ல | குரு | சனி | செவ் |
| | நவாம்சம் | | கேது |
| ரா | | | சந் |
| | சுக் | | சூரி |

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



12–12–2010 அன்று கோவை சின்னியம்பாளையத்தில் ஹோட்டல் லீ இராயல் மெரிடியன் என்ற ஐந்து நட்சத்திர ஹோட்டல் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களால் காணொளி காட்சி முறையில் திறந்து வைக்கப்பட்டது. மத்திய அமைச்சர் மாண்புமிகு. ஜி.கே. வாசன், அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம், சாந்தலிங்க அடிகளார், நடிகர் சத்யராஜ், கவிஞர் வைரமுத்து முதலானோர் வாழ்த்துரை வழங்கினார்.

தன்னுடைய அயராத உழைப்பாலும், திறமையாலும் நண்பர்கள் துணையோடு சென்னை ஹோட்டல் லீ மெரிடியன், தரணி சுகர்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட், ஆனந்தி டெவலப்பர்ஸ், தரணி பைனாஸ் லிமிடெட், PGP கல்வி நிறுவனங்கள் முதலியவற்றை நிறுவி வெற்றிகரமாக நடத்திவரும் பொருளாதார நிபுநர், பேராசிரியர் டாக்டர் பழனி ஜி. பெரியசாமி அவர்களின் சாதனை மகுடத்தில் சிகரமாக கோவை ஹோட்டல் அமைந்து கொங்கு நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளது. தமிழக அமைச்சர்கள் சுரேஷ்ராஜன், பொங்கலூர் பழனிசாமி, தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார், திரு. முத்துசுவாமி I.R.S, நமது சங்க பொருளாளர் திரு. K.K ரமேஷ், செயற்குழு உறுப்பினர்கள் திரு. சண்முகவேல், திரு.K.A.கணபதி, முனைவர் மணிமேகலை புஷ்பராஜ், திரு. S. சிவசாமி உட்பட ஏராளமான கொங்கு சொந்தங்களும், தொழில் அதிபர்களும் கலந்து கொண்டனர்.

மிக அருமையான முறையில், ரூ 300 கோடி செலவில் 254 நவீன வசதிகள் கொண்ட இந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலைக் கட்டி கோவை நகருக்குச் சிறப்பு சேர்த்துள்ள கொங்குமாமணி டாக்டர் பழனி ஜி. பெரியசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

❖❖❖❖❖

## சாதனை செய்ய ஆறு நல்ல வழிமுறைகள்

1. மிகப் பெரிய சாதனைகள் சாதிக்கப்படுவது வலிமையால் அல்ல, விடா முயற்சியினால்.
2. ஊக்கத்துடனும், துணிவுடனும் எந்த ஒரு காரியத்தையும் தொடங்குதல்.
3. ஆழ்ந்து சிந்தித்து வேலைகளை ஒழுங்குபடுத்துதல்.
4. சிந்தனையைச் சிதறவிடாது ஒருமுகப்படுத்தி கவனமாகச் செயல்படுத்துதல்.
5. நேரத்தையும், பணத்தையும் திட்டமிட்டுப் பயன்படுத்துதல்.
6. எப்போதும் சுறுசுறுப்புடனும், ஊக்கத்துடனும் இருத்தல்.

❖❖❖❖❖

# அழகூட்டும் உணவு

– டாக்டர். சிவராமன்

அந்த ‘பளிச்’ பாட்டியை எனக்கு, அவரது குடும்ப மருத்துவராய்ப் பத்து வருடமாய்த் தெரியும். எழுபதை நெருங்கும் அவர் பல நேரம் எனக்கு ஒரு பெரிய இன்ஸ்பிரேஷன். ‘கொஞ்சம் கண்ணுக்கு கீழே கரவளையம் வந்தாப்பிலே தெரியுது. மெடிசின் இல்லாமே எதனாச்சும் டயட் அட்வைஸ் இருக்கா டாக்டர் ?’ –என அறுபதுகளிலும் அவர் காட்டும் அழகு மீதான அக்கறை அசர வைக்கும். “சார் ! சீக்கிரம் என் ஐஸ்வர்யா ராய்க்கு பிரச்னையைப் போக்கிடுங்க. ஒரு வேளை அடுத்த வருசம் பாரீஸில் ‘கேட் வாக்’ போக வேண்டியிருக்கும்”, என்ற கூட வந்த அந்த அபிஷேக்பச்சன் தாத்தாவின் குறும்பில், அவர் அழகு மெனக்கிடல் எத்தனை தூரம் அந்நியோன்யமாக அவர்களது ஆரோக்கியமான வாழ்விற்கு வித்திட்டிருக்கிறது என்பது புரியும்.

“அழகு ஆண்டவன் அளித்த சிபாரிசுக் கடிதம்”, என்று ஒரு கவிதை உண்டு. ‘பளிச்’ என்று அழகாய் இருப்பது இன்று, எல்லோரும் விருப்பப்படும் ஒன்று. ஆனால் பலரும் ‘‘சிவப்பு தான் அழகு; பகட்டுதான் பளிச்’’ என நினைப்பதுதான் முட்டாள்தனம். மோர்க்குழப்பு நிறமும், மோனாலிசா முகமும் வாய்க்கவில்லை எனத் தாழ்வைத் தனக்குள் வளர்ப்பது தவறு. சிகப்பு நிறத்தைக் காட்டிலும், கருப்பு நிறம் தான் வசீகரத்தை வெளிப்படுத்துவதில் சிறப்பானது என பிரபல புகைப்படக் கலைஞர்கள் கூறுவதுண்டு. கருப்பு நிறத்திலும் களையாய், பளிச்சென உங்களை வைத்துக் கொள்ள உதவும் உணவும் மருந்தும் நம்மிடம் ஏராளம். இன்னொரு விஷயம் சிவப்பைக் காட்டிலும், சுறுப்பார்களுக்கு, உடல் நோய் எதிர்ப்பாற்றலும் அதிகம்!

ஆணோ/பெண்ணோ, இளம் வயதில் வசீகரத்திற்காக அக்கறைப்படும் அளவிற்கு வயதான பின்பு யோசிக்காமல் இருப்பதும் அழைகைத் தொலைக்கிறது. செல்லத் தொப்பை/ சிசேரியன் தொப்பை எனத் தன்னை அறியாமல் வளரும் தப்பைத் திருத்திக் கொள்ளவில்லை எனில் அழகு அடுத்த வீட்டில் தான் தெரியும். அது தான் நாற்பது ஆயிடுச்சே! இனி எதுக்கு சீவி சிங்காரிக்கணும் என அலட்சியப் படவேண்டாம். ஒய்வின்றி ஓடிக்கொண்டே இருக்கும் இந்த வேகமான மன அழுத்தமிக்க காலகட்டமான, நடுத்தர வயதில் தான் துணையின் ஈர்ப்பும், அரவணைப்பும் மிக அவசியம். அந்த ஈர்ப்பு திருமண வாழ்வில் எப்போதும் எந்த வயதிலும் தம்பதியரிடம் நிலைத்து இருக்க இந்த ‘பளிச்’ விஷயம் முக்கியம். மேலும், தனக்குள் தன்னம்பிக்கையை வளர்க்கவும், தளர்ச்சியையோ,

தள்ளாமையையோ தலைகாட்ட விடாமல் இருக்கவும் கண்ணாடியில் நம் உடலும் முகமும் அழகாய் ஆரோக்கியமாய் இருக்க வேண்டும். அழகாக 'பளிச்' என இருக்க என்ன செய்யலாம் ?

அழகு, இன்ஸ்டெண்ட் இடியாப்பம் மாதிரி வருவதல்ல. அதுபோல் பளிச்சென மிளிர்வது என்பதும் கண்ட கண்ட அழக கிரீம்களால் முகத்தை பட்டி பார்த்தும், கொண்டு வருவதல்ல. நேற்றிரவு சாப்பிட்ட சமோசாவிற்கும் இன்றைய உங்கள் முகச்சோர்விற்கும் நிறையவே தொடர்பு உண்டு. முதலில் உணவுத் தேர்வில்தான் உங்கள் அழகு தொடங்கும்.

## முகத்தின் அழகுக்கு

அகத்தை அழகாக வைதிருக்க வேண்டும். அகம் என்றால் மனம் மட்டுமல்ல. வயிறும்தான். எண்ணெய்ப் பிசுக்கான முகம் இருந்தால் தினசரி சீரகத் தண்ணீர் அருந்தவும். பால் வகையராக்களை ஒதுக்கிவிட்டு, பழ ஆகாரத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். குறிப்பாய் பாலிஃபீனால்கள் நிறைந்த பப்பாளி தினசரி உணவில் இருக்கட்டும். கேரட், தக்காளி சேர்த்த ஜூஸ் அதனுடைய ஆண்ட்டி ஆக்சிடண்ட் தன்மையால், முகத்தில் சுருக்கங்கள் வராது பாதுகாக்கும். நிறைய பருக்கள் (PIMPLES), சிறு குருக்கள் (ACNE) உள்ள முகமா ? வெள்ளைப் பூசணிக்காய் (தடியங்காய்), பாசிப்பயறு சேர்ந்து கூட்டாச் சமைத்து அடிக்கடி சாப்பிடுங்கள்.

கூடவே ஆவாரம்பூ, ரோஜா இதழ் சமபங்கு எடுத்து, இருமடங்கு முல்தானிமட்டி மணலில் கலந்து நன்கு மாவாக பொடி செய்து வைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையை பன்னீரில் குழைத்து வாரம் மூன்று நாள் முகப்பூச்சாகப் போடவும். போட்டு நாலு மணி நேரம் கழித்து முகம் கழுவவும். பளிச் முகம் பத்தே தலைப்பு தினங்களில்!

தினசரி உடல் இயக்கத்தின்போது, ஒவ்வொரு செல்லிலும் சேரும் தனி ஆக்சிஜன் அணுக்கள் செல் அழிவை ஏற்படுத்துவது தான் வயோதிகத்தைத் தொடங்கி வைக்கிறது. தோல் சுருக்கம், நரை திரை மூப்பு எல்லாம் இதன் அடிப்படையில் தான் துவங்கி, அழிவை ஆரம்பிக்கிறது. ஆண்ட்டி ஆக்ஸிடண்ட் சத்துள்ள உணவுகளும் மூலிகைகளும் தாம் இந்த லெல் அழிவை கூடியவரை தடுத்தும் தள்ளிப் போட்டும் அழகுக்கும் ஆரோக்கியத்திற்கும் வித்திடுகிறது. இந்தச் சங்கதி அதிகம் இருப்பது வண்ணமிகு காய்கனிகளில் தான். ஆதலால், கனிகள் மீது கண்டிப்பாய்க் காதல் கொள்வீர்.

தொடரும்....

❖❖❖❖❖